DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.610/2025**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | முருகன் |
| Father Name | : | நடராஜன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2026.
(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கூடக்கோவில் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.11.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் கூடக்கோவில் காவல்நிலைய **சாட்சி எண்.3** திருமதி.பி.கார்த்திகா சார்பு ஆய்வாளர் அவர்களுடன் நானும், என்னுடன் பணிபுரிந்த **சாட்சி எண்.1** ராஜபிரபு தலைமை காவலர் 158 ஆகியோர்கள் குற்ற தடுப்பு சம்மந்தமாக நெடுமதுரை மந்தை அருகே சென்ற போது, எங்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்த உடன் ஓட எத்தணித்தவர்களை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் முன்னுக்கு பின் முரணாக கூறியவர்களை திரும்ப விசாரித்து அழகு ராஜா, த/பெ.சந்தானம், வடக்கு தெரு, நெடுமதுரை மற்றொரு நபர் அருண் த/பெ.ராமன் வடக்கு தெரு, நெடுமதுரை ஆகியோர்களிடம் ஏன் எங்களை பார்த்து ஓடினீர்கள் என்று கேட்ட போது அழகு ராஜா என்பவர் என் மீது கூடக்கோவில் காவல்நிலையத்தில் அடிதடி வழக்கு உள்ளது அந்த வழக்கின் எதிரிகள் என்னை தாக்கிவிடுவார்கள் அவர்கள் தாக்குவதற்கு முன்பு அவர்களை நான் தாக்குவதற்காக எனது முதுகின் பின்புறம் வாள் வைத்துள்ளேன். இதை நீங்கள் பார்த்தால் கைது செய்துவிடுவீர்கள் என்று பயந்து ஓடினேன் என்று கூறினார். அரசால் தடை

செய்யப்பட்ட வாள் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் விதத்திலும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் இருப்பது தவறு என்று கூறி சுமார் 10.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் இருவரையும் கைது செய்தும் சுமார் 10.30 மணியளவில் எதிரிகளிடம் எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும், ஆசை வார்த்தையுமின்றி தானாக முன் வந்து கொடுத்த எதிரி அழகு ராஜா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். சுமார் 11.30 மணியளவில் அழகு ராஜா என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி தன்னிடம் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாளை எடுத்து ஆஜர் செய்தார். அதை அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றினார்கள். பொதுமக்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்ய முன்வராததால், நானும் என்னுடன் பணிபுரிந்த **சாட்சி எண்.1** ராஜபிரபு தலைமை காவலர் 158 கையொப்பமிட்டோம். 11.45 மணியளவில் எதிரி அருண் என்பவர் தன்னிடம் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாளை எடுத்து ஆஜர் செய்தார். அதையும் அத்தாட்சியில் கைப்பற்றினோம். பின்பு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும் என்னுடன் பணிபுரிந்த **சாட்சி எண்.1** ராஜபிரபு தலைமை காவலர் 158 கையொப்பமிட்டோம். மேற்படி 1வது எதிரி அழகு ராஜா ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1வது எதிரியின் அத்தாட்சியிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2வது எதிரியின் அத்தாட்சியிலுள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மதியம் சுமார் 12.15 மணிக்கு நிலையம் அழைத்து சென்று வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தோம். இவ்வழக்கு சம்மந்தமாக திருமங்கலம் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

சம்பவ இடமான நெடுமதுரை மந்தை என்பது கூடக்கோவில் காவல்நிலையத்தில் இருந்து சுமார் 6 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். கூடக்கோவில் காவல்நிலையத்தில் இருந்து நெடுமதுரை மந்தை தெருவிற்கு செல்ல வேண்டுமென்றால் இரண்டு, மூன்று கிராமங்களை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையத்தில் இருந்து ரோந்து பணிக்கு சென்ற போது மணி சுமார் காலை 09.15 இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ரோந்து பணி குறித்து காவல்நிலைய பொது நாட்குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளதா என்றால், சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு தான் தெரியும். மேற்படி ரோந்து பணிக்கு செல்லும் போது காவல்நிலையத்தில் இருந்து லத்தி, இரவு நேரம் என்றால் டார்ச்லைட் வைத்திருப்போம். காவல்நிலையத்தில் இருந்து அனைவரும் அரசு வாகனத்தில் செல்லவில்லை. ஆய்வாளர் விசாரணையில் ரோந்து பணிக்கு யார் யார் எந்த விதமான வாகனத்தில் எந்த பதிவு எண் கொண்ட வாகனத்தில் நாங்கள் சென்றோம் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால், சரிதான். நாங்கள் குற்ற தடுப்பு ரோந்திற்கு சென்றதால் பல்வேறு கிராமங்களுக்கு சென்று ரோந்து சென்றுவிட்டு தான் நெடுமதுரை கிராமத்திற்கு சென்றீர்கள் என்றால், சரிதான். நான் ஆய்வாளர் விசாரணையில் எந்தெந்த கிராமங்களுக்கு ரோந்து சென்றுவிட்டு சம்பவ இடமான நெடுமதுரை கிராமத்திற்கு சென்றோம் என்ற விபரம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் சென்றதாக சொல்லப்படும் சமயத்தில் எதிரிகள் எந்த திசையை நோக்கி நின்றுகொண்டிருந்தார்கள் என்றால், எனக்கு ஞாபகமில்லை. எதிரிகளை அடையாளம் கண்டு நாங்கள் மூன்று பேரும் ஆளுக்கு ஒரு திசையில் சென்று எதிரிகளை பிடிக்க முயற்சித்தோம் என்றால், சரிதான். ஆய்வாளர் விசாரணையில் எதிரிகள் இருவரும் ஒரே திசையில் ஓடினார்களா அல்லது வேறு வேறு திசையில் ஓடினார்களா என்ற விபரம் குறித்து ஆய்வாளர் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஓட

முயன்றவுடன் அவர்களை அந்த இடத்திலேயே பிடித்துவிட்டோம். நெடுமதுரை கிராமம் என்பது சுமார் 1000 நபர்கள் வசிக்கும் கிராமாகும். நெடுமதுரை மந்தை பகுதி என்பது அதிக ஆட்கள் நடமாட்ட பகுதி என்றால் சரிதான். நெடுமதுரை மந்தை பகுதியில் நிறைய கடைகள் மற்றும் வீடுகள் அதிகமாக உள்ளது என்றால், சரிதான். ஆனால் ஒரு கடை மட்டும் உள்ளது. அந்த இடத்தில் நிறைய கடைகள்  உள்ளது என்றும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் அருகில் டீ கடையில் இருந்த நபர்களையோ அல்லது அருகிலுள்ள வீடுகளிலுள்ள நபர்களை சாட்சியாக இருக்க அழைக்கவில்லை என்றால், சரியல்ல. அழைத்தோம் அவர்கள் முன்வரவில்லை. மேற்படி சாட்சியாக இருக்க அழைத்த நபர்களின் பெயர், முகவரி குறித்த விபரங்களை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. மேற்படி நபர்களை சாட்சியாக இருக்க அழைத்தும் மறுத்த நிலையில் அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை. ஆய்வாளர் விசாரணையில் நாங்கள் ரோந்து சென்ற நேரம் காலை அல்லது இரவா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், ஞாபகமில்லை. மேலும் 2வது எதிரியிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபோல் நாங்கள் எந்த ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், அதன் அடிப்படையில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், அத்தாட்சிகள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்த தயார் செய்யப்பட்ட ஆவணங்களை வைத்து காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு புள்ளிவிபர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு

ஆதரவாக ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.01.08 15:56:17 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.